இதழ்-69

01.03.2024

# தூமி

பல்சுவை மின்னிதழ்




## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

03 நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுவோ?
08 துரித கதியில் பிரமாண்டமாக நடைபெறும் திருப்பணி வேலைகள்
09 இலக்கியம் முதல் இன்றுவரை பெண்மையின் பேராற்றல்
15 விதவா விவாகம் செய்யடா...!
16 என் கால்கள் வழியே...
21 அபுதாபியில் முதல் இந்துக் கோயில்
22 ஆசிரிய சேவையைக் கைவிட்டு ஒருங்கிணைந்த பண்ணையில் சாதிக்கும் பெண்
28 சிவபூமியில் மகாசிவராத்திரி வழிபாடுகள்
30 மடந்தையை ஒழிப்போம் மானிடா
32 இளங்குற்ற நடத்தையை தூண்டும் காரணிகளும், தடுக்கும் சட்டங்களும்
37 உலகின் மிகப்பெரிய பாம்பு
38 பிடியெடுப்பின் போது மறைக்க முடியாத முகங்கள்



# நல்லதோர் வீணை செய்தே... அதை நலங்கெட புழுதியில் எறிவதுவோ...?




வார்த்தையிலேயே மனசுக்குள் சிறகு பூட்டிவிடக்கூடிய உணர்வுதான் சுதந்திரம். இந்த சுதந்திரம் வேண்டுமென்று போராட்டங்கள் பல்வேறு பிரிவினரால் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. மகளீர் தினம் வரும் இந்த மாதத்தில் மகளீர் சார்ந்த சுதந்திரம் பற்றி பேசுவது பொருத்தமானதாக இருக்கும்.

படிக்கும் படிப்பிலிருந்து திருமணத் தேதிவரை, சமூக முடிவுகளுக்குட்பட்டு, தன் ஆசைகளைத் தீயிட்டு, ஒரு குடும்பத்தின் வெளிச்சமாய் மாறி நிற்கும் நிலை இன்றும் உள்ளதா எனும் கேள்வியோடு எனது ஆசிரியர் பகுதியை ஆரம்பிக்கிறேன்.

சதை, இருத்தம், எலும்பு எனப் பிறப்பில் ஆணும் பெண்ணும் ஒரே உயிரினம்தான். அவர்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால், பெண்ணை பெண்ணை பலவீனம் ஆக்கியது எது? இந்தச் சமூகம்தான். யோசித்துப் பாருங்கள், நம் வீட்டில் இருக்கும் 20 வயதுப் பெண் ஹதனியே“ பக்கத்துக் கடைக்குச் செல்கிறாள் என்றால், 8 வயதுச் சிறுவனை அவளுக்குத் துணைக்கு அனுப்பும் கலாசாரம் இன்றும் எம்மத்தியில் இல்லாமல் இல்லை. பெண் பலவீனமானவள் என்றும் மென்மையானவள் என்றும், ஆண் வீரமானவன் என்றும், கடினமானவன் என்றும் கருதப்படுகின்ற மூடநம்பிக்கை இந்த சமூகத்தில் இருந்து முற்றாக நீக்கப்படவில்லை. இதை சில பெண்களும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதும்தான் மனக்கசப்பான விடயம்.




ஆனால் இவ்வாறு பெண்களுக்கு சமூகத்தில் பாதுகாப்பு இல்லை என்பதை உறுதி செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளன. குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யும் கொடூர சம்பவம் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. குடும்பத்தின் கௌரவம், குழந்தையின் எதிர்காலம் ஆகியவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு பல விஷயங்கள் வெளியில் தெரியாமலே மூடி மறைக்கப்படுகிறது. அப்படி வெளியில் தெரிகிற ஒரு சில குழந்தைகளின் மரணங்களும் நம்மால்

ஜீரணிக்க முடியாத அளவில் இருக்கிறது.

அதுவும், சிறு பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள், அன்றாட செய்தியாகி விட்டன் மனதை அவை கனக்கச் செய்கின்றன.பள்ளியில் மாணவியரிடம் அத்துமீறும் ஆசிரியர்கள் அசிங்கப்படுவதை, பத்திரிகைகளில் நாள்தோறும் பார்க்கிறோம். நல்லொழுக்கம், சிறந்த கல்வியை போதிக்க வேண்டிய ஆசிரியர்களே, இப்படி அறிவிழந்து நடந்து கொள்ளலாமா? வீட்டிலே கூட, நெருங்கிய உறவுகளாலும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களாலும், பெண் குழந்தைகள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

பெற்ற தந்தையே, தான் தூ க்கி வளர்த்த மகளிடம் கொடூரமான செயலைச் செய்வது அக்கிரமத்தின் அநீதியின் உச்சம். மது மயக்கத்தாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானதாலும் தான், பெரும்பாலான குற்றங்கள் நடக்கின்றன.

இதுதவிர, நாடு முழுவதும் ஆண்கள் சிலர் கஞ்சா போன்ற போதைப்



பொருட்களை பயன்படுத்துகின்றனர். இதனால் ஆண்மைத்தன்மை குறைந்ததாக அவர்களுக்கு ஒரு தாழ்வுமனப்பான்மை தோன்றும். இதனால் பெண்களிடம் தங்கள் ஆண்மையை நிலைநாட்டுவதாக நினைத்துக்கொண்டு வன்முறையில் ஈடுபடுகின்றனர். இந்த வன்முறைகள் வெளிச்சத்துக்கு வருவதே இல்லை. தற்கால கல்லூரி மாணவர்களும், பள்ளிச் சிறுவர்களும்கூட தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை பயன்படுத்தி வருகின்றனர். இது, அவர்களுடைய உடல் நலத்தை பாதிப்பது மட்டுமல்லாமல் சமூக நோயாகவும் மாறி அடுத்த பாலினத்தின் மீதான வன்முறையில் முடிகிறது.

இதுமட்டுமின்றி, பாதிக்கப்படும் பெண்கள் தங்களுக்கு ஏற்படும் கொடுமைகள் குறித்து வெளியே சொல்வதில்லை. நடிகைகள், பணியிடங்களில் பெண்கள் தங்களுக்கு எதிராக நடந்த பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் தாக்குதல்களை சமூக ஊடகங்கள் மூலம் வெளியுலகிற்கு சொல்கிறார்கள் என்றால், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சிலர் உள்ளனர். ஆனால் அன்றாடம் செத்து செத்துப் பிழைக்கும் சாமானிய பெண்கள் குறித்து சமூகத்தில் யாரும் பேசுவதில்லை. இதற்குக் காரணம், அவர்கள் தங்களுக்கு நடக்கும் கொடுமைகளை வெளியே சொல்வதேயில்லை என்பதுதான். சமுதாயத்தில் நம்மை தவறாக நினைப்பார்களோ? திருமண வாழ்க்கை என்ன ஆகுமோ?,

கணவர் என்ன நினைப்பாரோ?, வேலைபார்க்கும் இடத்தில் விட்டுக்கொடுத்துப் போகவில்லை என்றால் வேலை போவிடுமோ? என்ற பல சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதால் அவர்கள் வெளியே சொல்வதில்லை.

ஊடகங்கள் பெண்களை கவர்ச்சிப் பொருளாகக் காட்டி பாலின ஈர்ப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இதுவே, பெண்கள் மேல் மரியாதை இல்லாமல், அவர்கள் ஆண்களின் தேவைக்கென படைக்கப்படும் பொருட்கள் எனும் எண்ணத்தை ஆண்கள் மத்தியில் அதிகப்படுத்தி இருக்கிறது.

இது தவிர, பெண் குழந்தைகளை பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். இதனால் குழந்தைகளை கண்டுகொள்வதில்லை. குழந்தைகள் தொலைந்துபோவது வரை அவர்கள் என்ன செய்கிறார்கள்? யாருடன் பழகுகிறார்கள்? என்பது தெரிவதில்லை. குழந்தைகளிடம் அறிமுகமில்லாத நபர்கள் மட்டுமல்லாமல், குடும்பத்துக்குள் இருக்கும் நெருங்கிய உறவினர்களே இழிவாக நடந்துகொள்கின்றனர். இதை குழந்தைகள் வெளியே சொல்லத் தயங்குகின்றனர் அல்லது அஞ்சுகின்றனர்.


பாலுணர்வு மற்றும் பாலியல் கல்வியைப் பற்றிய பேச்சு என்றாலே அதைக் கேட்கக்கூடாத அல்லது பேசக்கூடாத ஒன்று என்ற எண்ணம் பரவலாகக் காணப்படுகிறது. எவ்வாறு ஒருவன் சாப்பிட, நீந்த மற்றும் கார் ஓட்ட தெரிந்திருக்கிறானோ அது போல், பால் கல்வியறிவு பெற்றிருத்தல் அவனை மகிழ்ச்சியாக வாழத்துணை புரிவதோடு சமூகத்தில் மற்றவர்களுக்கான பாலியல் ரீதியான பாதுகாப்பையும் உறுதி செய்கிறது.

ஆபாச திரைப்படங்கள், அசிங்கமான சமூக வலைதளங்கள் போன்றவற்றை தடுக்க, கடுமையான சட்டங்கள் இல்லாதது தான், இது போன்ற வன்கொடுமைகள் அதிகரிக்க காரணம். அரைகுறை ஆடை அணிவதும், உடல் தெரிய உடை உடுத்துவதும் மட்டுமே, பிரச்னைகளுக்கு காரணம் என, பழியை பெண்கள் மீதே சுமத்துகின்றனர். பெண்களின் உடை பலாத்காரத்துக்கு காரணமல்ல. இது, ஒரு ஆண் செய்த தவறை அர்த்தம் கற்பிக்கக் கொடுக்கும் ஒரு காரணமே தவிர இதில் உண்மையில்லை. தத்தமது உடலமைப்பிற்கேற்ற வகையிலும் கௌரவமான முறையிலும் தாங்கள் கலந்து கொள்ளும் வைபவத்திற்கேற்ற முறையிலும்



உடையணிவது சிறப்பு. நாகரிகமாக உடை அணிந்தாலும், கண்ணியமாக உடுத்துவது தான் பெண்களுக்கு அழகு, பாதுகாப்பு, அவசியமும் கூட! இதில் மாற்றுக்கருத்தே கிடையாது. அப்படியானால், பச்சிளம் குழந்தைகளிடமும், பள்ளி செல்லும் சிறுமியரிடமும், அவர்களின் உடையிலும், என்ன ஆபாசம் கண்டீர்? பெற்ற பெண்ணின், உடன் பிறந்த சகோதரியின் உடையில் ஆபாசமா அல்லது மன விகாரத்தின் வெளிப்பாடா? மூன்று வயதுக் குழந்தை மீதும் ஏழு வயதுக் குழந்தை மீதும் உங்களுக்கு தவறுதலாக நடந்துகொள்ளத் தோன்றினால் அது உங்களுக்கு ஏற்பட்ட மன நோய். இந்த மன நோய்க்கு மருத்துவர்களிடம் சென்று சிகிச்சை பெறுங்கள். இதைத் தவிர்த்து, பெண்களையும் குழந்தைகளையும் கொடுமைப்படுத்தாதீர்கள்.

இந்த சமூகச் சீரழிவை, சட்டத்தின் துணைகொண்டு மாற்றியமைக்க முடியாது. காரணம், அந்தச் சட்டத்தை ஏந்தியிருப்பவர்கள்தான் இந்தச் சீரழிவை விதைத்தவர்கள். இந்தச் சூழலிலிருந்து தனியாக யாரும் பாதுகாப்பு தேடவும் முடியாது. தனித்தனியாக திருத்தவும் முடியாது. குறிப்பிட்ட சமூகச் சூழல்தான் தனிநபர் பண்பாட்டை சீரழித்தது என்றாலும், தனிநபர்களாக அதனை மாற்றிக் கொள்ள இயலாது.



“பெண்ணைச் சுற்றியிருக்கும் கட்டமைக்கப்பட்டிருக்கும் பிம்பத்தை உடைத்து பற” என்பதைத்தான் பாரதி மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

*“பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்*
*பயங்கொள்ள லாகாது பாப்பா!*
*மோதி மிதித்துவிடு பாப்பா! – அவர்*
*முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!”*

ஒரு பெண் தற்காப்பு ஆயுதத்தை வைத்துக் கொள்வதற்கு இணையானவை இந்த வரிகள். கனல் கக்கும் தன் பாடல்கள் மூலம் பெண்களுக்கு உத்வேகம் அளித்தவன் பாரதி. ஆம்! பயந்து அலறாமல் திருப்பித் தாக்க கற்றுக் கொடுக்க வேண்டும். சிறுபிள்ளைகள் தைரியமற்றவர்கள், வெளியில் சொல்ல மாட்டார்கள் என்பதை வைத்தே இந்த காமுகர்கள் அவர்களை இலக்காக்குகிறார்கள். நாம் வாழும் உலகம் மிக மிக மோசமாகிக் கொண்டிருக்கிறது. எனவே போதுமான தற்பாதுகாப்பு உத்திகளை சிறுவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் தவறேதும் இல்லை.

***பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி***
***பேணி வளர்த்திடும் ஈசன்***
***மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல***
***மாதர் அறிவைக் கெடுத்தார்.***

***கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி***
***காட்சி கெடுத்திட லாமோ?***
***பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்***
***பேதமை யற்றிடும் காணீர்***

## விலங்குகளை சிறைப்படுத்தி ஆய்வு



அமெரிக்காவைச் சேர்ந்த மருந்து உற்பத்தி நிறுவனமான “சேபர் ஹியூமன் மெடிசின்ஸ்” தொடர்ந்து மருந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம் ஜார்ஜியா மாகாணத்தின் பெய்ன்பிரிட்ஜ் நகருக்கு அருகே சுமார் 30,000 குரங்குகள் வசிக்க 200 ஏக்கரில் ஒருகுட்டி நகரை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

இங்கு இனப்பெருக்கம் செய்யப்பட்டு வளர்க்கப்படும் நீண்டவால் குரங்குகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு மருத்துவ ஆய்வுக்கு அனுப்பி வைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அப்பகுதிவாசி டேவிட் பார்பர் கூறும் போது, “பெய்ன்பிரிட்ஜ் நகரில் சுமார் 14 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இந்த நகரில் 30 ஆயிரம் குரங்குகளை வளர்த்தால் எங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். எனவே இந்த திட்டத்தை உடனடியாக கைவிட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்றார். இதுபோல, மருத்துவ ஆராய்ச்சிக்காக குரங்குகளை ஓரிடத்தில் அடைத்து வைத்து இனப்பெருக்கம் செய்வது கொடூரமானது என விலங்குகள் நல அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## தூமியின் கண்ணீர்க் காணிக்கை

இருள்சூழ்ந்த
காராகிரகத்தின்
நான்கு சுவர்களுக்குள்
முடங்கிப்போன வேதனை
ஆண்டுகள் அவை. பல
ஏக்கங்கள் முற்றுப்
பெறாமலே முற்றுப்புள்ளி
அடைந்து விட்டது...
சாந்தன் அண்ணாவின்
ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கிறோம்.



# துரித கதியில் பிரமாண்டமாக நடைபெறும் திருப்பணி வேலைகள்



தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகத்தினை, முன்னிட்டு ஆலயப் பணிகள் முழு வேகத்துடன், சிறப்புறன் நடைபெற்று வருகின்றது.

பல கலைஞர்கள் மற்றும் பணியாளர்கள் இரவு பகல் பாராது இடைவிடாது பணியாற்றி வருகின்றார்கள். பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் மிகப் பெரிய ஆலய அமைப்புடன் அழகுற காட்சி தரும் வகையில் ஆலயப் பணிகள் நடைபெற்று வருகின்றது.



இலங்கையில் ஆதரவற்ற உயிர்களுக்கு உதவிக் கரம் நீட்டும் சிறப்பு மிக்க ஆலயத்தின் பெருமைகள் எழுத்துக்களால் வர்ணிக்க முடியாதவை.

சிறப்பு மிக்க அன்னையின் பக்தர்கள் அறகுற காட்சி தரும் ஆலயத்தை கண்டு பேரானந்தம் கொள்வார்கள் என்பது திண்ணம்.



திருப்பணி வேலைகள் மற்றும் கும்பாபிஷேகத்திற்குரிய நன்கொடைகளை தேவஸ்தான நிதி அலுவலகத்தில் வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியம். அல்லது தேவஸ்தான கும்பாபிஷேக திருப்பணி வங்கி கணக்கில் வைப்பிலிடவும்.

**கணக்கு விபரங்கள்:-**
**இலங்கை வங்கி**
**சுன்னாகம் கிளை,**
**கணக்கு இலக்கம்**
**77683985.**

## இலக்கியம் முதல் இன்று வரை

# பெண்மையின் பேராற்றல்..!



மோகினி, மோகத்தினால் அசுரர்களை மயக்குவதற்காக திருமால் எடுத்த ஓர் அவதாரமாகும். அழகான உடலைப் பெற்று அதைக் கொண்டு அசுரர்களை மயக்கி தேவர்களுக்கு அமுதம் கிடைக்க வழிவகை செய்தார் திருமால் . இங்கு அழகென்பது காமத்திற்காய்-அறிவை மயக்குவதற்காகப் பயன்பட்டமையை மாற்ற நினைத்தான் பிரமன். அழகென்பது தவத்திற்காகப் பயன்படுமாறு உருவாக்க முனைந்தான். அதற்காக அழகு நிறைந்த பெண்ணொருத்தியை படைத்தான். அவளுக்கு அகலிகை என்று பெயரிட்டான்.

உலகை முதலில் சுற்றி வருபவருக்குத் தன் மகளை மணமுடித்துத் தருவதாகப் பிரம்மன் கூறினான். அதன்படி கௌதமர் ஒரு பசுவை வலம் வந்து அகலிகையை மணந்ததாகச் சொல்லப்படுகிறது.

அழகில் மிக உயர்ந்தவளாக இருக்கின்ற அகலிகை மேல் இந்திரனுக்கு ஆசை உண்டாகிறது. அவள் ஆற்றங்கரையில் இருக்கும் சமயம் தன்னுடைய விருப்பத்தினை வெளியிட்டு அகலிகையின் கோபத்திற்கு ஆளாகிறான் இந்திரன். தன் கணவனைத் தவிர பிறரை நினையாமல் வாழும் கற்புக்கரசி அகலிகை என்பதை இந்திரன் புரிந்து கொண்டு, ஒருநாள் கௌதமர் ஆற்றங்கரைக்குச் செல்லும் நேரம், கௌதமராக உருமாறி அகலியைப் புணர்கிறான். திரும்பி வந்த கொளதமர் நடந்ததை அறிந்து இருவரையும் சபிக்கிறார்.

இவ்விடத்தில் ஒரு தடுப்பு கொஞ்சம் நில்லுங்கள் இக்கதையை வான்மீகி சொல்லும் போது புதிதாக வந்திருப்பவன் இந்திரன் என்று அறிந்த பின்னும் அகலிகை அவனுடன் கூடி மகிழ்ந்திருந்தாள்

என்கிறார். ஆனால் வால்மீகி இராமாயணத்தைத் தமிழோடும் பண்போடும் கலந்து பெயர்த்து எழுதிய கம்பரோ அகலிகையை "நெஞ்சினால் பிழைப்பிலாள்" என்றே கூறுகிறார்.

குடிலுக்குத் திரும்பிய கௌதமர், இந்திரனோடு அகலிகை இன்பமாக இருப்பதைக் கண்டு கோபம் கொள்கிறார். இந்திரனுக்கும் சாபமிட்டுவிட்டு, அகலிகையைக் கல்லாக மாறும்படி சபிக்கிறார். அவள் இந்திரன் கௌதமராக மாறி வந்தமையால்தான் இவ்வாறு நிகழ்ந்தது என்று விளக்கம் கூற, மனமிரங்கிய கௌதமர் அவள் புனிதமென்பது உண்மையென்றால் இராமரின் கால்பட்டு சாபம் நீங்கும் என்று கூறுகிறார்.

பின்பு, இராமாயணக் கதையின்படி இராமனின் பாதம்பட்டு அகலிகை சாபவிமோசனம் பெற்றாள் என்று தெரிகிறது.

இந்த சாப விமோசனத்திற்கு பின்னர் நடந்த கதை ஒன்று உள்ளது.



அதை சொல்லுகிறார் புதுமையை தன் பேனாவில் ஊற்றி எழுதிய எழுத்தாளர் புதுமைப் பித்தன்.

வனவாசம் முடிந்து சீதையும் ராமனும் அயோத்தி நோக்கி திரும்பையில் மீண்டும் தன்னை பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்து காத்திருந்தாள்.

அவள் நினைத்தது நடந்தது.

ரதத்தைவிட்டு இறங்கி ராமனும் சீதையும் அகலிகை குடிலிற்குள் வந்தனர். இராமனது நெற்றியில் அனுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவும் அனுபவத்தால் பூத்திருந்தது.

ராமனை அழைத்துக்கொண்டு கௌதமர் வெளியே உலாவச் சென்றுவிட்டார்.

தன் கருப்பையில் கிடந்து வளர்ந்த குழந்தையால் உள்ளத்தில் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை சீதையை உள்ளே அழைத்துச் சென்றாள். இருவரும் புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

இராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்து விட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள். அகலிகை துடித்து விட்டாள்.

”அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?” என்று கேட்டாள் அகலிகை.

“அவர் கேட்டார் நான் செய்தேன்” என்றாள் சீதை, அமைதியாக.

”அவன் கேட்டானா?” என்று கத்தினாள் அகலிகை் அவள் மனசில் கண்ணகி வெறி தாண்டவ மாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவளுக்கு ஒரு நீதியா?

ஏமாற்றா? கௌதமர் சாபத்திலும் குற்றமில்லையா? இராமன் அன்று எடுத்துரைத்த நியாயங்கள் அவனிற்கில்லையா?

இருவரும் வெகு நேரம் மௌனமாக இருந்தனர்.

“உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?” என்று கூறி, மெதுவாகச் சிரித்தாள் சீதை.

“உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?” என்றாள் அகலிகை. வார்த்தை வறண்டது.

“நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா் உள்ளத்தைத் தொடவில்லையானால்?”

வெளியில் பேச்சுக் குரல் கேட்டது. அவர்கள் திரும்பிவிட்டார்கள்.

சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

அகலிகையின் கோபம் ராமன் மனசைச் சுட்டது

ரதம் உருண்டது உருளைகளின் சப்தமும் ஓய்ந்தது.

கௌதமர் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்தார். நிலைகாணாது தவிக்கும் திரிசங்கு மண்டலம் அவர் கண்ணில் பட்டது.
புதிய யோசனை ஒன்று மனக்குகையில் மின்வெட்டிப் பாய்ந்து மடிந்தது. மனச்சுமையை நீக்கிப் பழைய பந்தத்தை வருவிக்க, குழந்தை ஒன்றை வரித்தால் என்ன? அதன் பசலை விரல்கள் அகலிகை மனசின் சுமையை இறக்கிவிடாவா?

உள்ளே நுழைந்தார்

அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம், மறக்கவேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்து கொண்டிருந்தது.

கௌதமர் அவளைத் தழுவினார்.



கௌதமர் உருவில் வந்தது இந்திரன் வேடமாகப்பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லாய் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்.

உலகிற்காய சீதையையே தீயில் நிற்பித்த இராமனால் பெற்ற சாப விமோசனத்தை வேண்டாம் என்று வெறுத்தாள். அவள் மனச் சுமை மடிந்தது.

பெண் என்னும் பெருஞ்சக்தி அது.

அதன் இன்னொரு பக்கத்தையும் பாருங்கள்.




ஓர் அழகிய இளம் மங்கை. அவளுக்கு முதிர்ந்த கணவன். மனமுவந்து வாழ்கிறாள். ஒரு கட்டத்தில் கணவன் குஷ்டரோகியாகிறான். அதன் பிறகும் அவளுக்கு வெறுப்பு ஏற்பட வில்லை. முதிர்ந்த கணவன் எத்தனை அநியாயம் செய்தும் அவனை ஆராதிக்கிறாள்.

ஒரு கட்டத்தில் ஒரு தாசியை பார்த்து "நான் இவளோடு கூட வேண்டுமென்கிறான். அதற்கும் அவள் இசைகிறாள். தாசிக்கு கூலியாக தாசியின் வீட்டை துப்புரவு செய்வது உள்ளிட்ட பணிகளை செய்கிறாள். தன் கணவனை தோளில் தூக்கிச் சென்று தாசியின் வீட்டுக்குச் செல்கிறாள்.
இது நளாயினி கதை.

நாளாயினியைப் போல் மீண்டும் புதுமைப்பித்தன் இன்னொரு பெண்ணைப்பற்றி நம்மிடம் எடுத்துக்காட்டுகிறார்.

அம்மாளு அவள் பெயர். ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது. கணவன் முருகேசன் குதிரை வண்டி ஓட்டுகிறான். அம்மாளு, முருகேசன், அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை - ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள்குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு. வீட்டு வாடகை, போலீஸ் மாமூல், முருகேசன்தம்பி திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள் தான்.

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி, அவனும், அவன் குதிரையும் தண்ணி போட்டு விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி டோக்கர்அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்கு பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும்பொழுது பேச்சுமூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப்பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோடஇன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?
அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.
சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் கண் வைத்திருந்தவன்.
இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய்



சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சிவார்க்கத்தான்! என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!

புதுமைப்பித்தன் அறிமுகப்படுத்திய அந்த பொன்னகரம் உங்களை வாயடைக்கச் செய்து விட்டதா?

பெண் என்ற பெயரிற்குள் எத்தனையோ இரகசியங்கள் இன்னும் இருக்கின்றன. சமூகத்தின் கண்களிற்கு எல்லா வண்ணங்களும் தெரிவதில்லை. பெண்களும் எல்லா வண்ணங்களையும் காட்டுவதில்லை. காட்டினால் சமூகம் சரி பிழை என்ற துலாக்கோலோடு தீர்ப்பு சொல்லவே புறப்படும். அவள் நிலையோ சங்கடமோ சமூகத்திற்கு ஒரு பொருட்டில்லை.

பெண்ணைப்பற்றி எழுதுவதற்கும் பெண்ணியம் பேசுவதற்கும் சமூகத்தில் பலர் இருக்கிறார்கள். ஆனால் பெண்ணின் பேராற்றலை தரசிக்கும் தைரியம் நம் சமூகத்தில் எத்தனை பேருக்கு உண்டு?

இங்கு நாம் அள்ளித் தெளித்தவை அபூர்வ மங்கைகளை பற்றிய கதையல்லை. ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் இருக்கின்ற அபூர்வத்தை பற்றிய கதைகளாகும். இலக்கியத்தில் எங்கோ நடந்த எப்போதே கண்ட கதைகளல்ல. இன்றும் அன்றாடம் நாம் வீதியில் காணும் அனைத்து பெண்களிடமுள்ள உள்ள ஆற்றல்களை இக்கதைகளில் காணலாம்.

“நமது தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அயலார் கையை எதிர்நோக்குவது அவச்செயல் ஆகும்.” என காந்தி கூறியதுபோல, மண்பாண்டங்கள் செய்தல், எண்ணெய் எடுத்தல், பாய் முடைதல், கூடை முடைதல், ஆடு மாடு, கோழி வளர்த்தல், தேன் எடுத்தல் போன்ற சிறுகுடிசைத் தொழில்களை செய்து தங்களது பொருளாதாரத்தை இந்த சமூகத்தில் போராடி ஓரளவிற்கு பெண்கள் உயர்த்திக் கொண்டார்கள்.

பெண்ணின் பலம் என்பது பெண்ணிற்கானது மட்டுமல்ல. ஆணிற்கும் அதுவே ஆதாரம்.

மாலவனோ இலக்குமியைத் தன் நெஞ்சில் ஏற்று மலர்மகள் உறை மார்பனாய்க் காட்சி தந்துக் கருத்தில் நிறைகின்றார். நான்முகனோ நாமகளைத் தன் நாவில் கொண்டு நல்லறம் காக்கின்றார்.

பெண் அறிவும், மங்களமும் செல்வமும் தந்தருள்பவள் மட்டுமல்ல. ஆணுக்குத் தெளிவருள் தந்திடும் சோதியாய், ஆணின் உயரிய எண்ணங்கள் உயர்வெற்றி அடைய உதவும் சக்தியாயும் அமைகின்றாள்.

பெண் கடலின் உப்பெனவும், காற்றின் இசையெனவும் ஆனவள். குடும்பம் தழைக்க அன்பின் உரமிடுபவள். தன்னை உருக்கி, சிறுமைப் படுத்தி, வலி ஏற்று, முற்றுமாய்த் தான் சார்ந்த குடும்பத்தினை வளப்படுத்தத் தன்னுள் பெரும் தேய்தலை ஏற்றுத் தியாகத்தின் வழி பெருந்தெய்வ நிலையை எய்தி நிற்பவள்.

நம் பார்வை இன்னும் பிரகாசமானால் வீட்டில் தொடங்கி வீதியில் காணும் அத்தனை பெண்களின் புதுமையையும் கொண்டாடத் தொடங்குவோம். பெண்ணைக் கொண்டாட ஒரு தினம் போதாது. ஒவ்வொரு நொடியும் அது நம் கடமையே..



# விதவா விவாகம் செய்யடீ...!

பாரதியின் “சந்திரிகையின் கதை” யில் இடம்பெறும் வசனம் இது.



“விசாலாட்சி! விசாலாட்சி! நான் இரண்டு நிமிஷங்களுக்கு மேல் உயிருடன் இருக்க மாட்டேன். என் பிராணன் போகு முன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ள வரை மறந்து போகாதே!

முதலாவது, நீ விவாகம் செய்துகொள். விதவா விவாகம் செய்யத்தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவனுள்ள வரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியமில்லை.



ஆதலால், நீ ஆண்மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநல சாஸ்திரத்தைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிட்டு, தைரியத்துடன் சென்னைப் பட்டணத்துக்குப் போய் அங்குக் கைம்பெண் விவாகத்துக்கு உதவி செய்யும் சபையாரைக் கண்டுபிடித்து, அவர்கள் மூலமாக நல்ல மாப்பிள்ளையைத் தேடி வாழ்க்கைப்படு””

ஐ.வி.மகாசேனன்

2



# என் காலக்கள் வழியே...

## இந்திய பயணத்துக்கான வாய்ப்பு....!

ஆம். இந்தப்பகுதியில் எனது இந்தியா பயணத்துக்கான வாய்ப்பை, அதில் ஏற்பட்ட அனுபவங்களை வாசிப்பாளர்களுடன் உரையாடலாம்னு நினைக்கிறேன். இம்முறை இந்தியாவுக்கான பயணத்தின் வாய்ப்பு, என் அனுபவம் நிச்சயம் பட்டக்கற்கை மற்றும் பட்டப்பின் கற்கைக்காக இந்தியாவை தெரிவு செய்ய விரும்புவர்களுக்கான பயனுறுதியான தகவலை பெறக்கூடியதாக அமையும். நான் முதலாய் பெறும் அனுபவத்தை என்பின் அடியொற்றி நடை போடுபவர்கள் இலகு நடை போட வேண்டும் என்ற விருப்புடனேயே இப்பகுதியை பதிவு செய்கிறேன்.

இந்தியாவுக்கான இம்முறை பயணம் மூன்றாவது முறை. கடந்த இரு முறையும் ஆகக்கூடியது ஒரு மாதத்துக்கு உட்பட்டதாகவும், சுற்றுலா என்ற எண்ணங்களுக்குள்ளே தமிழ் நாட்டுக்குள்ளேயே அமைந்திருந்தது. இம்முறை எனது முதுகலைமானி கற்கைக்கானது. இரு வருடங்களுக்கானது. அதிலும் புதிய அனுபவ தேடல் என்ற முனைப்பு. ஏனெனில் இம்முறை பயணம் வட இந்தியாவிற்கு. இந்தியாவின் தலைநகர் டெல்லிக்கு. இந்த பரவசத்துக்கு முதல் டெல்லிக்கான வாய்ப்பு நகர்வை உரையாடிடுவோம். அதே இப்பகுதியில் அவசியமானது. ஆம். எனது இப்பயணத்திற்கான உந்துதல் இந்தியாவின் புலமைப்பரிசிலை சார்ந்தே அமைகின்றது. மார்ச் (2023) மாதம் அளவில் எனது விரிவுரையாளர் சி.திருச்செந்தூரன் அவர்களின் நெறிப்படுத்தலில் இந்தியாவின் புலமைப்பரிசில் தொடர்பான விண்ணப்பத்துக்கான முன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். முழுமையான நம்பிக்கை

இல்லாவிடினும் பகுதியளவிலான திருப்தியே காணப்பட்டது. எனினும் எனது விரிவுரையாளரின் முழுமையான உந்துதலே எனது ஆரம்ப முயற்சிக்கு காரணமென்பதில் மறுப்பதிற்கு இல்லை. தன் மாணவனை ஆசான் உயர்த்தி பார்ப்பதில் மகிழ்ச்சியடைவார் எனும் கூற்றுக்களின் நிதர்சனத்தை எனது விரிவுரையாளர் உயர் கற்கைக்கான புலமைப்பரிசில் அறிவிப்புக்கள் வரும்போதெல்லாம் என்னை நெறிப்படுத்தி தொடர்ச்சியாக கொடுக்கும் அழுத்தங்களிலேயே அறிந்து கொண்டேன்.

சரி. நாங்க விண்ணபத்திருந்த புலமைப்பரிசில் முடிவுகளை பார்ப்போம். இந்திய புலமைப்பரிசில் உயர் இலங்கை கல்வி அமைச்சுடன் இணைந்த செயற்பாடு என்ற நிலையில், மார்ச் மாதம் இலங்கை உயர்கல்வி அமைச்சின் இணையவழி (Online Portal) விண்ணபத்தையே செய்திருந்தேன். நான் முதுகலைமானி கற்கைக்கே பதிவு செய்திருந்தேன். மார்ச் மாத இறுதியில் கலாநிதி பட்ட ஆய்வுக்கு விண்ணப்பித்திருந்தவர்கள், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். எனினும் முதுகலைமானி கற்கைக்கு பதிவு செய்திருந்த நான் அழைக்கப்பட்டிருக்கவில்லை. எனது ஏமாற்றத்தை உணர்ந்த என் விரிவுரையாளர் ஆரம்பத்தில் கலாநிதி பட்ட ஆய்வளார்களுக்கான நேர்முகத்தேர்வுகள் முடிய முதுகலைமானிக்கான அழைப்பு வரும். காத்திரு. என ஆறுதல் வார்த்தைகளாய் கூறினார். நான் இந்திய புலமைப்பரிசில் முயற்சியின் முடிவு தோல்விதான் என்ற எண்ணங்களுக்குள் நகர்ந்து விட்டேன்.

ஏப்ரல் நடுப்பகுதியில் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரலாய கல்விப்பிரிவின் மின்னஞ்சலில் இருந்து தங்களின் Online Portal-இல் (a2ascholarships.iccr.gov.in) விண்ணப்பிக்குமாறு சில அறிவுறுத்தல் அடங்கிய மின்னஞ்சல் வந்திருந்தது. முற்றுப்பெற்றது என நான் நினைத்த இந்திய புலமைப்பரிசில் நடவடிக்கைக்கு மின்னஞ்சல் காற்புள்ளி இட்டது. மின்னஞ்சல் கிடைக்கப்பெற்ற மறுநாள் யாழ்ப்பாணத்திலுள்ள உப இந்திய உயர் ஸ்தானிகரலாயத்திலிருந்து தொலைபேசி அழைப்பில் இணையவழியூடாக பதிவு செய்யுமாறு கூறியிருந்தார்கள். இவ்அழைப்பும் மின்னஞ்சலும் ஏறக்குறைய புலமைப்பரிசில் உறுதி என்றவாறு எனது பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் அவர்களும் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.திருச்செந்தூரன் அவர்களும் நம்பிக்கையூட்டினார்கள். எனினும் என் மனதில் முழுமையடையாத திருப்தி.



மின்னஞ்சல் அறிவுறுத்தலின்படி கொழும்பு தூதரகத்தினூடாக (Through Indian Mission as Colombo) எனும் தெரிவினூடாக மின்னஞ்சல் கிடைக்கப்பெற்று ஒருவாரத்துக்குள் ஆவணங்களை உரிய முறையில் ஒழுங்குபடுத்தி இந்திய புலமைப்பரிசில் இணையவழியில் பதிவேற்றினேன். விண்ணப்பத்தில் ஐந்து இந்திய பல்கலைக் கழகங்களையும் கற்கையையும் தெரிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டது. என் தெரிவுகள் யாவும் வடஇந்தியாவை மையப்படுத்தியே இருந்தது. காரணம் வேறுபட்ட மொழி என்னை ஆங்கில மொழி பிரயோகத்துக்கான அழுத்தத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை. மற்றும் தென்னிந்தியா நம் நாடு என்ற ஒரு உணர்வு.

இந்த இடத்தில என் பழைய அனுபவம் ஒன்றை பதிவு செய்றதும் பொருத்தமா இருக்கும். நான் முதல் தடவை 2017ஆம் ஆண்டு சென்னைக்கு செல்கையில் இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்த மொழிப்பதட்டம் இந்தியாவின் சென்னை விமான நிலையத்தில் ஏற்பட்டிருக்கவில்லை.



யாழ்ப்பாணத்துக்கு வந்ததொரு மகிழ்ச்சி. காரணம் என் மொழி. தமிழ். அந்த நினைவுகளின் ஆழமான பதிவின் தாக்கமும் வடஇந்தியா நோக்கிய தெரிவுகளுக்கு காரணமாகியது. இதற்கு இத்தோடு ஒரு வினாக்குறி இட்டாச்சு.

மறுபக்கத்தில் ஐரோப்பிய நாட்டு மோகமும் என் இரட்டை மனோநிலையில் மோதிக்கொண்டு தான் இருந்தது. அதற்கு உரம் போடும் வகையில் என் சீனி அண்ணனும் தன் நண்பர்களோடு உரையாடி என்னை Study Visa-இல் பிரான்ஸ் அழைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தான். என் மனமும் குரங்காட்டம் நிலையின்றி தாவிக்கொண்டிருந்தது.

இந்நிலையிலேயே, ஏப்ரலில் அனுப்பிய இந்திய புலமைப்பரிசில் விண்ணப்பத்திற்கு ஜூன் நடுப்பகுதியில் பதில் மின்னஞ்சல் வந்தது. “டெல்லி பல்கலைக் கழகத்தில் என்னுடைய அனுமதி இந்தியாவின் மௌலானா அஷாட் புலமைப்பரிசிலின் கீழ் தற்காலிகமாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.” அளவிடமுடியாத மகிழ்ச்சி. மின்னஞ்சலில் என் பதில் ஏற்பை இணையத்தில் உறுதிப்படுத்துமாறு கூறப்பட்டது. என் விண்ணப்பத்தில் முதல் தெரிவாக டெல்லி பல்கலைக்கழகமே இருந்தது. முதல் தெரிவே உறுதிப்படுத்தப்பட்டு வந்திச்சு. கரும்பு தின்ன கூலியா வேண்டும். நான் உடனடியாக இணையவழியில் என் ஏற்பு பதிலை உறுதிப்படுத்தினேன்.

எனினும் இந்திய புலமைப்பரிசிலின் இணையவழி கோளாறு உடனடியாக ஏற்க முடியவில்லை. இது நாம புலமைப்பரிசிலுக்கு பதிவு செஞ்ச காலத்துல பெரிய இடர்பாடு. வழமையாக இந்தியாவின் புலமைப்பரிசில் ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரியின் முதல் வாரத்தில் அதுசார்ந்த அறிவிப்புகள் வருவதுண்டு. கொரோனா தாக்கத்தின் இயல்புநிலை திருப்பத்தின் தாமதம் எமக்கான அறிவிப்பு மார்ச் நடுப்பகுதியிலேயே வந்திச்சு. தொடர்ச்சியாக இந்திய இணையவழி சேவையும் தன் பங்குக்கு நெருக்கடிய தந்திச்சு. எனினும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரலாய கல்விப்பிரிவின் உத்தியோகத்தர்கள் மின்னஞ்சல்களுக்கு (நனரறநைபெ. உழடழஅடிழ;அநய.பழஎ.ை) உடனடியாக பதில் அளிப்பார்கள். அவர்களது சலிப்பற்ற செயற்பாடு உண்மையில் பாராட்டத்தக்கது.

எவ்வாறோ மார்ச் மாதம் தொடங்கிய புலமைப்பரிசில் தொடர்பான குழப்பமான சூழலுக்கு ஜூனில் ஒருவாறாக ஒரு திருப்திகரமான முடிவு கிடைக்கப்பெற்றதில் மகிழ்ச்சி. அதுக்கு பிறகு தான் தொடங்கிச்சு பயண இழுபறிகள். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கு மாக. எனினும் இப்பெரும் பெறுமதி கிடைக்கப்பெறுகையில் இவ் இழுபறி பெரிய பொருட்டில்லை என என் மனமே அமைதியும் கூறியது.

ஏனென்றால் இந்திய புலமைப்பரிசில் என்பது அலிபாபாவின் விளக்கு போன்ற பேரதிஷ்டமே. இந்திய பல்கலைக்கழகத்தின் கற்கைக்கான முழுக்கட்டணமும் புலமைப் பரிசிலுக்குள்ளேயே உள்ளடக்கப்படும். அதுமட்டுமன்றி வாழ்க்கைச் செலவுக்கு மற்றும் தங்குமிட வாடகைக்கு மாதந்தோறும் கற்கைக்கு ஏற்ப வழங்கப்படுகிறது. free-ah வந்து படிச்சு பட்டத்தை வாங்கிட்டு நாட்டையும் சுத்திட்டு போங்கோனா கசக்கவா போகுது. இதில இந்திய அரசியல் இருக்கு. மறுப்பதற்கில்லை. தன் அயல் அரசின் மக்களை தான் சார்ந்த கருத்தியலுக்குள் வைத்திருக்கும் எண்ணங்களே ஆகும். அதிலும் குறிப்பாக கற்ற சமுகமே ஓர் அரசின் உயர் தீர்மானமெடுக்கும் சக்தி. அத்தீர்மானமெடுக்கும் சமுகத்திடம் தன்சார் அபிப்பிராயத்தை பேணும் முயற்சியே இந்திய புலமைப்பரிசிலின் அரசியல் இலக்கு. எல்லா அரசுகளும் ஏதோவொரு தமது தேசிய நலனுக்குள்ளேயே செயற்படும். எனவே இலக்கை நாம் தெளிவாக அடையாளங்கொண்டு பயணிப்பது நமது சமயோசிதம்.

ஆம். நாம் என் பயண ஏற்பாட்டுக்க வருவம். என் பெயர் எனக்கு பெரிய வில்லங்கம் தான். "மகாசேனன்". இலங்கையை ஒருகாலத்தில ஆட்சி செய்த மன்னனின் பெயர். இந்த பெயர் எல்லாருடைய மனதிலும்



இலகுவாக பதிஞ்சிடும். இதனாலேயே என் பல்கலைக்கழக காலத்தில் என் சிரேஷ்ட மாணவர்களின் அன்பு வதைகளுக்குள் அதிகம் மாட்டுப்பட்டுள்ளேன். ஆக இம்முறை பிரச்சினை ஆங்கில எழுத்தில. ஏப்ரலில் விண்ணப்பம் நிரப்புகையில் இருந்த சலிப்பு என் பெயர் பதிவிலேயே வெளிப்படுது. மகாசேனன்-ல (Makasenan) இறுதி N இல்லாம போய்ச்சு. அது ஒன்று. அடுத்தது அப்பான்ட பெயர ஆங்கிலத்தில ஒவ்வொரு காலத்தில வெவ்வேறு ஆங்கில எழுத்துக்களை மாற்றியுள்ளேன். விக்னேஸ்வரன்-ல 'க்'-க்கு 'C' 'K' 'G'-னு ஆசைப்படுறதெல்லாம் போட்டிருக்கன். க.பொ.த உயர்தர சான்றிதழ், க.பொ.த சாதாரண தர சான்றிதழ் மற்றும் என் கடவுச்சீட்டு மூன்றிலும் மூன்று விதம். எல்லாத்துக்கும் சத்தியக்கடதாசி முடிக்கனும். அது பெரிய துன்பம். சட்டத்தரணிய கொண்டு சத்தியக்கடதாசி தயாரித்து, உயர் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தி, வெளிநாட்டு அமைச்சுல சான்றுபடுத்தி கொழும்புக்கான இந்திய துணைத்தூதரகத்திற்கு ஒப்படைக்கனும். நம்நாட்டு விவகாரம் தான் உலகறிஞ்ச விசயமாச்சே. வெளிநாட்டு அமைச்சுக்கு போறதுனா ஒருவாரத்துக்கு முதலே பதிவு செஞ்சு அனுமதி எடுக்கனும். அது பெரிய சுமை. எல்லா சுமையும் கடந்தா, தூதகரகத்தில நேரடியா ஒப்படைக்கேலாதாம். Visa Centre-க்கு ஊடாக தான் அதுவும். எல்லாரும் நல்லா உழைக்கிறாங்க என்ற எண்ணத்தோட அதுவும் அவ்வாறே செஞ்சு முடிஞ்சுது.

நான் இப்படியெல்லாம் இழுபறிபட, ஒருத்தன் யாழ்ப்பாண தூ தரகத்தினூடாக (Through Indian Mission as Jaffna) என்று தெரிவு செஞ்சு போட்டவன் யாழ்ப்பாண தூதரகத்தோடேயே எல்லா வேலையையும் முடிச்சு விட்டான். விசாவும் யாழ்ப்பாண தூதரகமே கூப்பிட்டு கொடுத்து, நாலு போட்டோவும் எடுத்து தங்க பேஸ்புக்ல போட்டு விட்டாங்கள்.

நான் பெயர் பிரச்சினைக்கு ஒருக்கா கொழும்பு. அப்புறம் விசா எடுக்க கொழும்பு. இறுதியா பயணத்துக்கு கொழும்புனு. ஒரே கொழும்பு அலைச்சல் தான். இதுக்கும் என் மனமே ஆறுதல் சொல்லிச்சு. "எல்லாமே அனுபவம் தானே." என் அனுபவம் எனக்கு என்ன நன்மையோ தெரியல. இந்த எழுத்துக்கள் வாசிப்பாளர்களுக்கு நன்மையாகட்டும்.

சரி. விசா எடுத்தாச்சு. இரண்டு வருஷம்னு குத்தி தந்திருக்காங்க. இனி டில்லி பயணம் தான். டில்லி பயணத்தையும், பல்கலைக்கழக முதல் நாளையும் தொடர்ந்து பயணத்தில் பார்ப்போம்.

**பயணிப்போம்...!**

# அபுதாபியில் முதல் இந்து கோயில்

மேற்கு ஆசியாவின் மிகப்பெரிய இந்து கோயிலாக கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான கட்டிடத்தில் 10,000 பேர் வரை தங்கலாம். கடந்த 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்து கோவில் கட்டுவது குறித்த அறிவிப்பை அபுதாபி அரசு வெளியிட்டது. மேலும் கோவில் கட்டுவதற்காக 27 ஏக்கர் நிலத்தையும் அந்த அரசு வழங்கியுள்ளது. கோவில் கட்டுமானத்திற்கான அறிவிப்பை 2015ல் அறிவித்திருந்தாலும் 2018ம் ஆண்டு கோவிலின் கட்டுமான பணி தொடங்கியது. கோவில் கட்டுவதற்கு இளஞ்சிவப்பு கற்கள் ராஜஸ்தானில் இருந்து வரவழைக்கப்பட்டது. இந்த ராஜஸ்தான் கற்களில் என்ன விசேஷம் என்றல் இது சுமார் 50 டிகிரி செல்சியஸ் வெப்பத்தையும் தங்கக்கூடியது. இந்த கோவிலின் உயரும் 108 அடி, நீளம் 262 அடி, அகலம் 180 அடி அளவில் கட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள 7 அமீரகங்களை குறிக்கும் வகையில் 7 கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளது. இவை,





நிலநடுக்கம், மற்றும் அதிக வெப்பத்தால் பாதிக்காத வகையில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்பத்தப்பட்டு உள்ளது. சுவாமிநாராயணன், அக்ஷர்-புருஷோத்தம், ராதா-கிருஷ்ணா, ராம-சீதா, லக்ஷ்மணன், அனுமன், சிவன்-பார்வதி, விநாயகர், கார்த்திகேயர், பத்மாவதி-வெங்கடேஸ்வரா, ஜகன்னாதர் மற்றும் அய்யப்பன் உள்ளிட்ட சிலைகள் வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த 1500 கைவினை கலைஞர்கள் இந்த கோவிலின் சிலைகளை செதுக்கியுள்ளனர்.

இந்த கோவிலை கட்டுவதற்கு சுமார் 904கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கோவில் அபுதாபியின் அல் ரபா என்ற இடத்தில் இருக்கும் அபு முரேகா என்ற பகுதியில் அமைந்துள்ளது. இந்த கோவில் துபாய்க்கும், அபுதாபிக்கும் இடையே அமைந்துள்ளது. துபாய், அபுதாபி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இந்து மக்கள் அதிகம் இருப்பதால் இந்த கோவில் அமைக்கப்பட்டுள்ளது.



# ஆசிரிய சேவையைக் கைவிட்டு ஒருங்கிணைந்த பண்ணையில் சாதிக்கும் பெண்

**புவனேஸ்வரன் பிரசாந்,**
**அல்லைப்பிட்டி**

கொழும்பு நகரில் ஓடும் இயந்திரத் தனமான வாழ்க்கை முறைக்குள் இருந்த விஜிதாவுக்கு, அவர் செய்துகொண்டிருந்த ஆசிரியர் பணியில் இருந்து வரக்கூடிய மாத வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. காசு கையில் வந்த அடுத்த ஐந்து ஆறு நாற்களிலேயே போன இடம் தெரியாமல் போய்விடும். மீதம் இருக்கும் இருபது, இருபத்தைந்து நாட்களைக் கடப்பது சவால் நிறைந்ததாக இருந்தது. தனி ஒரு பெண்ணாக இருந்து மூன்று பிள்ளைகளின் கல்விக்கும், மருத்துவச் செலவுக்கும் அன்றன்றைக்குமான மேலதிகமான பணத்தேவையை பூர்த்தி செய்யவும் ஏதாவது இன்னுமொரு வேலையைச் செய்தாக வேண்டிய கட்டாயம் அவருக்கு உண்டாகியது. இதுவே பகுதிநேரமாக வெவ்வேறு வேலைகளை நோக்கி அவரை நகர்த்தக் காரணமாகவும் இருந்தது. தையல் செய்து பார்த்தார். அதிலிருந்தும் போதுமான வருமானம் வரவில்லை. வேற என்ன செய்யமுடியும் என்று வெவ்வேறு தொழில் முயற்சிகளும் அவற்றில் இருந்து கிடைக்கக் கூடிய வருமானம் மற்றும் தோல்விகளும் அவரை அங்குமிங்குமாக நகர்த்திகொண்டிந்தது. 2017 நெருக்கடிமிக்க கொழும்பு நகரத்தில் இருந்து ஒரேயடியாக யாழ்ப்பாணத்துக் நகர முடிவெடுத்து பயணப்பொதிகளை ரயிலில் ஏற்றி அனுப்பிக்கொண்டு நானும் வந்து சேர்ந்தார். அங்குதான் அந்த சுவாரசியமான பொறி தட்டின நிகழ்வு நடந்தது. அவருடைய பொதிகள் வந்து சேர்ந்த அதே ரயிலில் இருந்து சற்றுத் தள்ளி வேறு வித்தியாசமான பெட்டிகளும் இறங்குவதை அவர் கவனித்ததுடன் அது பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன், அங்கு நின்றுகொண்டிருந்த ரயில் நிலைய அதிகாரியிடம் சுட்டிக்காட்டி "அவை

என்ன?" என்று கேட்டார். பெட்டிகளில் இருப்பவை கோழிக் குஞ்சுகள் என்று அவர் சொன்னதும், விஜிதாவுக்கு அதனைச் சுற்றி பல எண்ணங்கள் சுழன்றோடின. யாழ்ப்பாணத்துக்கு கொழும்பிலிருந்து தான் கோழிக்குஞ்சுகள் வருகின்றானவா! அந்த மாதிரியான நகரப்புறத்தில் பிராணிகள் வளர்ப்பது அவ்வளவு சாத்தியமில்லாத ஒன்று. இங்கு அதற்காக வெளி இருந்தும் இறக்குமதி செய்யப்படுவது அவருக்கு உறுத்தியது. அதற்கு தேவை இருக்கிறது அதை தான் ஏன் செய்யக்கூடாது என்று தோன்றியது. ஆனாலும் எதுவும் நினைத்த மாத்திரத்தில் சாத்தியமில்லை. அது ஒரு அசைவுப்புள்ளிதான்.

யாழ்ப்பாணத்தில் வாடகை வீடுகளில் இருக்கும் போது எதுவும் சுதந்திரமாக செய்ய முடியாது. அதுவும் பிராணி வளர்ப்பு என்று வாயைத்திறந்தாலே வாயில் அடிப்பார்கள். வீட்டுக் காரரும் சரி ஊர் காரரும் சரி. எப்ப எண்டாலும் பிரச்சனை தான். கோழி வளர்த்தால் நிலமெல்லாம் கறுத்துப்போகும், வீட்டுக்குள்ள கால் வைக்கேலாது, எங்களுக்கு மூக்கிருக்கு, அங்கால வருது, இங்கால வருது என்று ஏகப்பட்ட கலகக் குரல் கேக்கும். அதற்கு விஜிதாவுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்குமளவுக்கு தெம்பிருக்கவில்லை. அதனால் தன்ர தேவைக்கு ஒரு ஐஞ்சு கோழி வளப்பம் எண்டு முடிவெடுத்து வளக்க ஆரம்பித்தார். பிள்ளைகளுக்கு சத்தான சாப்பாடு வேணும். முட்டையும் இறைச்சியும் என்கின்ற ஒரு சின்ன நோக்கம் அப்போது இருந்தது. அப்பத்தான் மூக்கு விறைச்ச மாதிரி வீட்டுக்காரனுக்கு தெரிஞ்சு கோபம் வந்திட்டு. பிறகு சமாளிச்சு இதுக்குப்பிறகு இல்லை எண்டுற ஒப்பந்தத்தோட பிரச்சனை முடிஞ்சது.

அடிக்கடி விஜிதா யாழ்ப்பாண நகரத்தில இருக்கிற தன்ர தூ ரத்து சொந்தக் காரர் வீட்டுக்கு போய்வாறது வழக்கம். அங்க இரண்டு தாராக்கள் நடந்து திரியும். சின்ன வயசில விஜிதாவுக்கு தாராக்களில நல்ல ஈடுபாடு இருந்தது. அந்த வயசில ஸ்கூல் யூனிபோர்மோட திரிஞ்சு தாராக்களை துரத்தித்திரிந்த கதையை அங்கு போனதும் ஞாபகத்துக்கு வர சொல்லிக்கொண்டு இருப்பார். அண்டைக்கு அப்பிடி தன் நினைவோடையில் நீந்தி மிதக்கும்போது, வீட்டுக்காராம்மா வாய்விட்டுது, "இதுகாலால ஒரே ஆக்கினை நீ கொண்டு போய் வளக்கிறது எண்டால் வள" எண்டு. ஏதோ ஒரு புளுகத்தில பெட்டியிலபோட்டு இரண்டையும் வீட்டுக்குக் கொண்டு வாசலுக்கு வரேக்குள்ளதான் அங்க ஒரு பிரச்சனை இருக்கு எண்டது ஞாபகத்துக்கு வந்தது. மாசமாசம் வீடு சுத்திப்பாக்க வாற வீட்டுக் காரனுக்குத் தெரியாமல் தாராக்களை எப்பிடி வளக்கிறது எண்டு தவிப்பா



இருந்தது. தாராவ வைச்சு என்ன செய்யிறது எண்டு ஒண்டும் தெரியாமல் வெறும் வடிவுக்கு பாக்கிறத்துக்கு, செல்லமாக மணியம்மா மணிப்பா எண்டு பெயர் வைத்து வளக்க ஆரம்பித்தார்.

இரண்டு கல்லு அடுக்கி குளம் வேறு கட்டிவைத்து விட்டார். பிள்ளைகள் மாதிரி உரிமை குடுத்ததால அதுகள் வீடு வாசல் எல்லாம் சுற்றி சுற்றி எச்சம் போடுவதை வாடிக்கையாக வைத்திருந்தன. இதெல்லாத்தையும் கண்டதில இருந்து திட்டிக்கொண்டு இருந்த வீட்டுக்காரன் போனாப்போகுது, “இது இரண்டும் தான்” என்று அழுத்திவிட்டுப் போனார். போன அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஒருதொகை தாராக்கள் வளவுக்குள் உலவுவதை பார்க்க அவருக்கு சகிக்கவில்லை. பங்குக்குத் தாராக்களின் இடைவிடாத சந்தங்களினால் எரிச்சலடைந்த ஊர்காரர்கள் போகவும் வரவும் நச்சரித்துக்கொண்டே இருந்தார்கள். இந்த மாதிரி தொல்லைகள் அதிகரிக்க அதிகரிக்க தொடர்ந்து அந்த வீட்டிலேயே குடியிருக்க முடியாமல் இருந்தது. தாராக்களை யாருக்காவது இலவசமாக கொடுத்துவிடலாம் என்கின்ற



முடிவுக்கே வந்துவிட்டார். அதே நேரம் வேறு வழியும் தெரியவில்லை.

இந்த நேரத்தில் தான் அந்தப் பகுதியில் வீதி அபிவிருத்தியில் பங்கு வகித்துகொண்டிருந்த சீனப் பிரஜையின் கண்ணில் வாத்துக்கள் தென்பட்டன. அவர் விஜிதாவிடம் வந்து ஒரு தாராவை இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டு போனார். விஜிதாவுக்கு தாராக்கள் விலைபோகும் என்பது அப்போதுதான் தெரிந்தது. அன்றைக்கு மாலையே ருசி பிடிபட்ட சீனப் பிரஜை மேலும் ஐந்து தாராக்களை வாங்கிக் கொண்டு போனார். அன்றைக்கு மட்டும் பன்னிரண்டாயிரம் ரூபாய் விஜிதா கைகளில் கிடைத்ததை வாழ்நாளில் மறக்கவே மாட்டார். ஒரே மாதத்தில் விஜிதாவின் தாரக்களை வாங்கி ஏப்பம் விட்டு விட்டார் அந்த சீனப் பிரஜை. கிடைத்த அந்த ஒரு வாடிக்கையாளரை வரும்போது ஏமாற்றக்கூடாது என்பதற்காக தாராக்களைத் தேடித்தேடி வவுனியாவரைக்கும் அலைந்து திருந்தார் விஜிதா. இப்பிடித்தான் தாரக்களின் பெறுமதி பிடிபட்டது.

எங்கள் ஊரில் தாராக்களுக்கு செல்வாக்கு இல்லைதான். ஆனால் ஏற்றுமதிக்குக் கிறாக்கி இருப்பதை புரிந்துகொண்ட விஜிதா வியாபாரத்தை இன்னும் விஸ்திரமாக்க முடிவெடுத்தார். அந்த பிரஜைக்கூடாக தொடர்வுகளைப் பெற்று எல்லையை விரிவாக்கினார். இப்போது இன்னும் தேவை அதிகம் என்பதனால் தன்னுடன் இருபதற்கும் மேலானவர்களை

இணைத்துக்கொண்டு அவர்களையும் வளப்படுத்தி தாராக்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கினார். தாய்லாந்தில் இருந்து குஞ்சுகளை இறக்குமதி செய்து அவற்றை வளப்படுத்தி மீண்டும் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வளர்ந்தார்.

கோழிகளும் தாராக்களும் விலைபோகத்தொடங்கும் போது பண்ணை பெரிதாக்க வேண்டி இருந்தது. இப்போது ஆசிரியற்பணியில் இருந்து நிரந்தரமாக வெளியேறிவிட துணிச்சலாக முடிவெடுக்க முடிந்தது. வீடும் மாற்றலாகி போனபிறகு ஒருமித்து முழுநேரமாக அந்த சின்னப் பண்ணையை பெரிதுபடுத்தும் எல்லா வழிகளையும் கண்டறியத் தயாரானார்.

பண்ணைகள் பற்றிய தேடலும் அலைச்சலும் ஓரளவு அனுபவமும் அடுத்தடுத்து வெற்றிப்படிகளை ஏறிக் கடப்பதற்கு வழி செய்தன. ஆசிரியாராக இருந்து பண்ணை வளப்புக்கு என்று மாறும்போது அதற்கான ஆதரவு முதலில் அவரது குடும்பத்தாரிடம் இருந்து கிடைக்கவில்லை. நல்ல தொழில் இருந்து விடுபடல் என்பது அவர்களுக்கு முரணாக இருந்தது. சகோதரங்கள் வங்கியிலும் அரச



சேவைகளிலும் ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்கள். இவளுக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை என்று புலம்புவதும் கேட்டுக்கொண்டுதான் இருந்தது. அதுமாதிரி உள்ளூரில் பண்ணை பற்றிய பார்வை வேறு ஒன்றாக இருந்தது. "பண்ணையாளர்" என்று யாரும் சொல்வதும் குறைவு, அது கௌரவமான ஒன்றாகவும் பார்க்கப்படவில்லை. கோழி வழக்கிறவர், ஆடு வளக்கிறவர், மாடு வளக்கிறவர் என்கின்ற சொற்பிரயோகங்கள் தான் இங்கு அதிகம். மதிப்புக்குறைவாக கருதும்போதும் அவரவர் கருத்துக்களைப் பகிரும்போதும் அதனைத்தாண்டி இந்தக் காதால் கேட்டு அந்தக் காதால் விட்டுவிட வேண்டும் என்று தெளிவாகவே விஜிதா இருந்தார்.

செய்ய செய்ய பண்ணை வளர்ப்பு கடல் போல விரிவதையும் தன் அனுபவத்தின் போதாமையும் அடிக்கடி அவருக்கு தயக்கத்தை உருவாக்கிக் கொண்டு இருந்தது. முன்வைத்த காலை பின்வைக்கக் கூடாது என்ற எண்ணம் இன்னும் கற்றலை அகலப்படுத்தியது.

நாளுக்கு நாள் வாடிக்கையாளர்கள் பெருகிக் கொண்டே போனபோது விஜிதா திக்குமுக்காடிப்போனார். அத்தளவுக்கு உற்பத்தி காணாது. சிறிய பண்ணையில் தொடர்ச்சியான உற்பத்திகளை பெரிய அளவில் பெறுவது என்பது அவருக்கு சவாலாக இருந்தது. பண்ணையை அதற்காகத் தயார்ப்படுத்த வேண்டும். உடனடியாகப் பலப்படுத்த வேண்டும்.

.நவீனப்படுத்தலுக்காக கோழிக் குஞ்சுகளை பொரித்தெடுப்பதற்க்கான கருவியை கொள்வனவு செய்ய முடிவு செய்து விலை விசாரித்தால் லட்சங்களில் கூறினார்கள். அந்தளவுக்கு பணத்தை செலவிடும் அளவுக்கு அவர் இருக்கவில்லை. அதற்கு மாற்றாக தனது மகனின் உதவியுடன் ரெஜிபோமினைக் கொண்டு அத்தகைய கருவி ஒன்றை உருவாக்கி செலவை குறைத்தார். படிப்படியாக உற்பத்தியை பெருக்கிகொண்டார்.

சொற்ப கோழி இனங்களையே தெரிந்து வைத்திருந்த விஜிதாவுக்கு அதற்குப் பிறகும் கோழி இனங்கள் இருப்பது ஆச்சரியத்தைக் கொடுத்தது. எல்லாவறையும் தன் பண்ணையில் வளர்க்க வேண்டும் என்று தேடித்தேடி வாங்கிக்கொண்டுவந்தார். அரிதானவை இங்கு கிடைக்கக் கூடியமாதிரி இருக்கவேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக இருபத்தி ஐந்துக்கும் மேற்பட்ட கோழி இனங்களை கொண்டுவந்து வளர்த்து விற்பனை செய்ய ஆரம்பித்தார்.

அதே போல முயல்கள், கால்நடைகள் என்று பண்ணை விரிந்தது. அதே பக்கத்தில் தாராக்களின் விற்பனை சரிவடைந்து போனது. கொரோனா மற்றும் அரச பொருளாதார சிக்கல்கள் ஏற்றுமதி இறக்குமதியில் பதிப்பை உண்டாக்கியதன் விளைவு அதுவாகும். இப்படித்தான் ஒருங்கிணைந்த பண்ணை ஒன்றில் ஒன்றைச் சார்ந்து உருவானது. ஒன்றில் இழப்பதை ஈடுசெய்யும் புத்திசாலித்தனம் விஜிதாவுக்கு அப்போது நன்றாகவே கைகூடி இருந்தது. வாங்குதல் விற்றல் என்பதற்கும் அப்பால் விலங்குகள் பறவைகளைப் பாதுகாத்தல் என்பதும் எண்ணமாக உருவாக பண்ணை மறுபக்கம் சரணாலயமாகவும் இருக்கத் தொடங்கியது.

பண்ணை பெரிதாகும் போது பண்ணைகளில் இருக்கும் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அடிக்கடி நோய்களும் தொற்றுக்களும் ஏற்படும். சில பொழுதுகளில் அவற்றினூடாக பெரும் உற்பத்திப் பொருளாதார இழப்புக்கள் ஏற்படுவதுண்டு. இவற்றைத் தவிர்ப்பதற்கு சரியான பராமரிப்பும் நோய் முகாமைத்துவம் அவசியம். இதெல்லாம் உயிரிழப்புக்களுக்கு பிறகு அதற்கும் தயாராக வேண்டி இருந்தது. விஜிதா அதனை உள்ளூர் முறைப்படியே எதிர்கொண்டு முடிந்தவரை இயற்கை பொருட்களைக் கொண்டே தீர்வு காண முயன்று வெற்றியும் கண்டார். விஜிதாவின் கைமருத்துவம் வேலைசெய்தது. பொதுவாக முயல்களுக்கு வரக்கூடிய, முடி உதிர்வு, சொறி நோய்களுக்கு வேப்பெண்ணையுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து பூசினார். கோழிக்குஞ்சுகள் பொரித்ததும் நோய்கள் ஏற்படாமல் வலுப்பட மிளகு நச்சீரகமும்



மஞ்சள் தண்ணீர் கொடுத்தார், கற்பூரவள்ளி, குப்பைமேனி போன்ற தாவரங்களை கிடைக்கிற காலத்தில் எடுத்துப் பொடியாக்கி அவற்றுக்குக் கொடுத்து அவற்றுக்கு நோய் எதிர்ப்புத்தன்மையை அதிகப்படுத்தினார். . மழை, பனி காலங்களில் கோழிகளுக்கு சளி பிடிக்கும் போது அவற்றைத் தனிமைப்படுத்தி வெற்றிலையும் மிளகும், கற்பூரவள்ளிச் சாறு சின்ன வெங்காயம், வேப்பிலைச்சாறு போன்றவற்றைக் கொடுத்து நோயில் இருந்து காப்பாற்றினார். இப்படியாக ஆங்கில மருத்துவமே அவருக்கு தேவைப்படவில்லை. இயற்கை முறையில் ஆரோக்கியமான பறவைகள் விலங்குகள் வளர்ப்பு என்பதில் அவரிடம் எந்த மாற்றுக் கருத்தும் இருந்ததில்லை.

ஆசிரியர் தொழிலை கைவிட்டதில் அவருக்கு எந்த வருத்தமில்லை. சேவைக் காலத்துக்குப் பிறகு பெயர் மங்கிவிடும் வேலையை விட, மனநிறைவோடு பண்ணை வளர்ப்பில் சாதித்தது, தான் யார் என்று இந்த உலகுக்கு அடையாளம் காட்டியது "தனக்கு பெருமையே" என்று விஜிதா மகிழ்ச்சியோடு மனநிறைவோடு கூறிக் கொள்ளுகிறார்.


அவரது இந்த சவால்களைத்தாண்டிய தொழில்முயற்சியின் வெற்றியும் அவரது கதையும் புதிய சுயதொழில் முனைவோருக்கு உத்வேகம் தரும் ஒன்றாக இருக்கிறது.

## 'மக்கள் தேர்வு' விருது

49-வது பீப்பிள்ஸ் சாய்ஸ் விருதுகள் விழா கலிபோர்னியாவின் சாண்டா மோனிகாவில் நடந்தது. 1975-ம் ஆண்டு முதல் "மக்கள் தேர்வு" விருது வழங்கும் விழா நடந்து வருகிறது.

பாப் பாடல், இசை, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சியில் சிறந்தவர்களை கௌரவிக்க இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த ஆண் கலைஞர் விருதை 'BTS'இசைக்குழுவை சேர்ந்த ஜங்குக் பெற்றுள்ளார். மக்களின் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்யப்படும் இவ்விருதை பெறும் ஆசியாவைச் சேர்ந்த முதல் கலைஞர் என்ற பெருமையை ஜியோன் ஜங்குக் பெற்று உள்ளார்.

தற்போது ஜங்குக் ராணுவத்தில் சேர்ந்துள்ளதால் விருதை நேரில் பெற வர முடியவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் "கோல்டன்" தனி ஆல்பத்தின் மூலம் இவர் அறிமுகமாகி பிரபலம் அடைந்தார்.



## சிவபூமியில் மகா சிவராத்திரி சிறப்பு வழிபாடுகள்

உலகமெங்கும் பரந்து வாழும் இந்து மக்களால் எதிர்வரும் 08.03.2024 மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அந்தவகையில் வழமை போல இந்த முறையும் எமது நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் சிறப்பாக வழிபாடுகள் இடம்பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதோடு கடந்த வருடம் மட்டக்களப்பு மண்ணில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரர் ஆலய வளாகத்தில் மூலவருக்கான கும்பாபிடேகத்தோடு திறந்து வைக்கப்பட்ட திருமந்திர அரண்மனையிலும் இவ்வருடம் முதல் முறையாக சிவராத்திரி விரத வழிபாடுகள் இடம்பெற உள்ளன.

வடக்கு கிழக்கு மட்டுமன்றி பல இடங்களில் இருந்து வரும் மக்களும் எமது இந்த இரண்டு அரண்மனைகளிலும் உள்ள 108 சிவலிங்கங்களுக்கு தங்கள் திருக்கரங்களால் அபிசேகம் செய்து இரவு முழுவதும் சிவசிந்தனையோடு வழிபாடுகள் மேற்கொள்ள சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## சைவத்தின் காவலர் நீலகண்டன் ஐயாவின் நினைவுநாள்

தமிழும் சைவமும் சிவபூமியில் நீண்டு வளர தர்ம நெறியில் நின்று உழைத்த பெருமகனாரும், இலங்கையில் புகழ்பூத்த சட்டத்தரணியுமான மதிப்பிற்குரிய திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் சிவகதி அடைந்து ஆறு வருடங்கள் (18.02.2018) நிறைவு பெறும் இவ்வேளையில் அவரது சிவப்பணிகளுடனான அறப்பணிகளை போற்றி வணங்குவோம்.



# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# மடந்தை ஒழிப்போம் மானிடா !...

வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்

தளை காட்டினையும்
களையுதிர் பெரும் பாட்டினையும்
கடத்தி சென்றது போதும்...
பிறர் பாட்டினையும்
நாம் தொலைத்த கேட்டினையும்
தொண்டு தொடர வேண்டாம்...

இவ் இவ் பிரச்சினையெனக்கூறி காட்டி,
வெறும் கதைக்கூற்று அளந்த
வேடிக்கை போதும்.
எம்மவர் முன் போதித்த வழக்கம்
பின் இடர் கலையவே ஒழிய
வேற்று வரன்முறையை உருவாக்கி
பிரிவினவாத போக்காகவில்லை ,
அதனை தெளிக முன்னெழுக ...

கல்வியிற் திறன் கொண்டெழுக ...
"எம் மீது விட்டெறிந்த விதாண்டாவாத
வீண்பேச்சுகள் கரையொதுங்க
பேசியவர் மூக்குமேல்
கைவைத்து எண்ண "...

ஊழியப்படை பலம் நமது
வாழ்வாதாரம் ஊதியமென
அறிந்த சல்லிகள் தாம்
தினம் சரணடைய வேண்டி ,
பொருட்போதை உள்ளீர்த்து
வாக்குச் சாவடியை தீவினமாய்
இங்கணம் எறிந்து ,
வருங்கால பிள்ளைகளின் கனவிற்
தடை எய்தார் அது எப்படி ?...



என் சக மனிதா !
துவண்டிடா மனதிடை துச்சம்
துகளில்லை வீண் கணை
தொடுக்கும் துர்க்கனை
துவக்கமே ஒழித்திட
என்றெழுவார் எம் இளையார்.

படிப்பிற்கோர் வாய்ப்புகளாம்
தேடி , பெற்றாரிடத்தே
முயற்சி ஊடே
சிறுமுதல் நாடி , சென்றார் ...
கணமே கிடைத்திடுமா ?
கையகத்தே சிறுமுதல்.
தின உழைக்கும்
குடி(மகன்) அண்ணார்.
தினவேலை முடிந்து ,
கண்கள் தேடும்
பிள்ளையின் பையை கக்கத்தே
எடுத்து வைத்து வீரநடை
அந்தி சாயும் வேலை எங்கே ?
மயான ம(மா)து கடை நோக்கி...

ஐயோ ! இதற்காக
சிக்கனப்பட்டான்
பிள்ளைகல்விக்கு அரைக்காசு
கொடுக்க... வியர்வை சிந்தி
தினக்கூலியானாய்...
காலை பாடபுத்தகம் பை மாலை
குடி போத்தல் பை.
இதனாலோ அப்பிள்ளைவள் கண்
கல்வியிற் சரஸ்வதி
குடி புகவில்லையோ !...
யாது கூறின், குடும்பத்தின்
சமூகத்தின் சாபக்கேடு.

நாளைய பரீட்சைக்கு தயாராகும்
பிள்ளையின் மனதினை
விரக்திக்கு ஆளாக்கி...
வீட்டாருடன் சொல்லிடங்கா
தொல்லைகள் பல நிகழ்த்தி...

காலையில் சுயநனவின்றி,
தினக்கூலியென்று ஓடுகிறாய்...
நாளைய பேசுபொருளாகும்
போகும் வரை...
தூண்டில மீனாய்
துள்ளி குதிக்காதே
தூண்டாக்கி தேவையின் சகிதம்
கறிக்கு ஆளாவாய் !

சுயலாபம் வேண்டும் உன் குடும்ப
நலனிற்காய் குடிமகனே !..
இனி வெட்கி
தலை குனிய வேண்டாம்.
தின சேமிப்பை உரமாக்குக...
பிள்ளையின் கனவிற்
கல்வியை என்றும் வளமாக்குக.
காலம் கடமை செய்யும்.





# இளங்குற்ற நடத்தையை தூண்டும் காரணிகளும் தடுக்கும் நுட்பங்களும்

செல்வி சு.கிருந்திகா
உளவியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்

உலக நாடுகளில் 18 வயதுக்கு கீழ்ப்பட்ட அனைவரும் சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்களில் குற்றநடத்தைகளில் ஈடுபடுபவர்கள் இளம் குற்றவாளிகள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். (Unicef, 2019). குற்றவியல் நிபுணரான Ferdinand வரையறுப்பதன் படி சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாத நடத்தைகளில் ஈடுபடுகின்ற அல்லது விலகல் நடத்தையில் ஈடுபடுகின்ற சிறுவர்கள் இளங்குற்றவாளிகள் என அழைக்கப்படுகின்றனர்.

## இளங்குற்ற நடத்தைகளின் வகைகள்

இளங்குற்றவாளிகள் அதிகளவில் மேற்கொள்ளும் குற்ற வகைகளில் முக்கியமானவையாக, திருடுதல், திருடுவதற்கு உதவி செய்தல், போதைப்பொருட் பாவனை, குழு மோதல், குழுவாகச் சென்று கொள்ளையடித்தல், பாடசாலை செல்லாதிருத்தல், பிறரை தாக்குதல் மற்றும் கொடுமைப்படுத்தல், கொலை செய்தல், சண்டையிடுதல், சூதாட்டம், வீட்டை விட்டு ஓடுதல், விடுதியை விட்டு ஓடுதல், பிச்சை எடுத்தல், போராட்ட குழுவில் இணைதல், ஆபாசப்படம் பார்த்தல், பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் பெண்களிடம் பலவந்தமாக நடத்தல், பாலியல் விலகல் நடத்தைகள், சமூக

ஊடகங்கள் வழியாக பிறரை மிரட்டுதல், ஆயுதம் வைத்திருத்தல், போதைப்பொருட் கடத்தல், சட்டத்திற்கு புறம்பான ஓவியம் வரைதல், திகில் தேடும் நோக்கில் வாகனங்களை திருடி ஓட்டுதல், கடன் அட்டை மோசடி, கடத்தல், மிரட்டி பணம் பறித்தல், அங்கீகரிக்கப்படாத அணுகல், விலங்கு கொடுமை, பின்தொடர்தல், மோசடி.

## இளங்குற்ற நடத்தையை தூண்டும் காரணிகள்

இள வயதினர் குற்ற நடத்தைகளில் ஈடுபடுவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. உடலமைப்பின் காரணமாக குற்றவாளிகள் உருவாகின்றனர் என்பது லோம்ரோசா (Lombrosa) என்பவரின் கொள்கை. பிற்காலத்தில் வந்த குற்ற நூலறிஞர்கள் இதை ஏற்கவில்லை. தொடர்ந்து வயது, பால், இனம் இவற்றின் அடிப்படையில் ஆய்வுகள் நிகழ்ந்தன. வறுமை, அறிவு மந்த நிலை என பல்வேறு



காரணங்கள் இளங்குற்ற நடத்தையை தூண்டுவதாக கருதப்பட்டது. இளங்குற்ற நடத்தையை தூண்டும் காரணிகள் பின்வருமாறு:

## உயிரியற் காரணிகள்

இளங்குற்ற நடத்தைக்கான பிரதான காரணியாக உயிரியற் காரணிகள் உள்ளன. மூளையில் காணப்படும் குறைபாடுகள், ஓமோன் சுரத்தலில் சமநிலையின்மை முதலியவற்றைக் குறிப்பிட முடியும். உதாரணமாக மரபியல் காரணிகள் காரணமாக உருவாகும் மனக்கிளர்ச்சி காரணமாக குற்ற நடத்தையில் ஈடுபடுவதைக் குறிப்பிட முடியும். கூடுதலாக மூளை வளர்ச்சியில் ஏற்படும் அசாதாரணங்கள், Prefrontal cortex deficiencies முதலியன இளம் வயதினரின் முடிவெடுக்கும் திறன் மற்றும் தூண்டுதல் திறன் ஆகியவற்றைப் பாதிப்பதனால் குற்றச் செயல்களுக்கு வழிவகுக்கின்றது.

## உடலியற் காரணிகள்

இள வயதினரில் காணப்படும் உடல் நோய்கள், உடற் காயங்கள், உடற்பாக இழப்புக்கள் காரணமாக உருவாகும் இயலாமை மற்றும் வலியுணர்வு அவர்களில் மன அழுத்தத்தையும், விரக்தியுணர்வையும், பழி வாங்கும் எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றது. இதனால் தூண்டப்படும் சிறார்கள் பிறரைக் காயப்படுத்தல், அடித்தல், கொலை செய்தல், விலங்குகளை தாக்குதல் முதலிய குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக நண்பன் தன்னைக் காயப்படுத்தியதால் அவனை பழிவாங்கும் நோக்கில் அவனை

கொடுமைப் படுத்துவதைக் குறிப்பிடலாம்.

## உளவியற் காரணிகள்

இளமைப்பருவம் சிக்கல்களும் சவால்களும் நிறைந்த காலமாகும். புயலும், நெருக்கீடும், உளக் கொந்தளிப்பும் கொண்ட காலமாகும். இன்றைய சமுதாயத்தில் சமூக அநீதிகள், ஏழ்மை, ஏற்றத்தாழ்வுகள், அடிப்படை உரிமைகள் மறுப்பு, போலித்தனம், இவைகளை இளைஞர் சமுதாயம், காணும்போது கொதித்தெழுகின்றதாலும், "நான் யார்?" "நான் என்ன?" உலகில் எனது வாழ்வினதும் பொருள் என்ன? எதற்காக நான் வாழ்கிறேன்? சமுதாயத்தில் எனது இடம் என்ன? எங்கு போகிறேன்? இப்படியான கேள்விகளுக்கு முறையான பதில்கள் கிடைக்காததாலும் நெருக்கீடு, மன அழுத்தம், உளச்சிதைவு, தாழ்வுச்சிக்கல், மனவடு முதலிய உள நோய்களுக்கு உட்படுகின்றனர். இத்தகைய உள நோய்கள் அவர்களை குற்றச்செயல்கள் புரியத்தூண்டுகின்றன.

## குடும்பக்காரணிகள்

குடும்பக்காரணிக்குள் பிரதானமனக குழந்தை வளர்ப்பு முறையை குறிப்பிடலாம். குழந்தை வளர்ப்பு முறை தொடர்பான ஆய்வுகள் தாய்- சேய் பிரிவினையை அனுபவிக்கும் குழந்தைகள் பிற்காலத்தில் குற்ற நடத்தைகளை அதிகளவில் வெளிப்படுத்துவர் என தெரிவிக்கின்றன. ஒழுங்கின்மையும் கட்டுப்பாடின்மையும், அன்பின்மை, பிள்ளைகளின் குற்ற நடத்தைக்கு ஊக்கமளித்தல், அதிகம் செல்லம் கொடுத்து வளர்த்தல் மற்றும் அதிக கண்டிப்பாக இருத்தல் முதலிய குழந்தை வளர்ப்பு முறைகளும் இயங்குற்ற நடத்தையை தோற்றுவிக்கின்றன. இவற்றைவிட சிதைவடைந்த குடும்பம், ஒற்றைப் பெற்றோரைக் கொண்ட குடும்பம், முறையற்ற திருமணம், திருமணத்திற்கு அப்பாலான உறவுகள், குடும்ப உறவுகளிலிருந்து ஓரங்கட்டப்படல், பெற்றோரியம் மற்றும் பெற்றோரின் போதைப்பொருட்பாவனை போன்றவை தாக்கம் செலுத்துகின்றன.

## பொருளாதாரக் காரணிகள்

இளங்குற்ற நடத்தையைத் தூண்டுவதில் குடும்ப வறுமை, இள வயதிலேயே தொழிலாளராக மாறுதல், பலவந்தமாக பாலியல் தொழில்களுக்கு உட்படுத்தப்படல், வர்க்கம் போன்ற பொருளாதாரக் காரணிகள் செல்வாக்கு செலுத்துவதைக் குறிப்பிடலாம்.



இளங்குற்ற நடத்தையில் ஈடுபடுகின்றவர்களில் பலர் வறுமையினால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களில் பலர் ஆரம்பத்தில் சிறுவர் தொழிலாளர்களாகவே தோற்றம் பெறுகின்றனர். Birkenhead (2012), அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையுள், கல்வி என்பவற்றை வழங்க முடியாத குடும்பங்களில் உள்ள சிறுவர்கள் மத்தியில் இளங்குற்றநடத்தை முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது.

## பாடசாலை

சமூகமயமாக்கலின் இரண்டாம் நிலை முகவராகத் தொழிற்படும் சமூக நிறுவனமான பாடசாலை சிறுவர்களை வினைத்திறனாக மாற்றும் தொழிலை செய்கிறது. குறித்த நிலையிலிருந்து பாடசாலை விடுபட்டு செயற்படும் போது சிறுவர்களுக்குத் தேவையான ஒழுக்கம் மற்றும் நற்பண்புகளை முறையாகக் கற்றுக்கொடுக்கத் தவறுகிறது. Berger & Gregory (2009), பாடசாலை குற்றநடத்தை (School Deliquesce) பாடசாலைகளில் வர்க்கம் சார்ந்த அடுக்கமைவுகள், அடையாளப்படுத்தல் (Labeling) போன்றன இளங்குற்ற நடத்தைக்கான ஆரம்ப நிலையாக உள்ளன. சில சந்தர்ப்பங்களில் பாடசாலை இடைவிலகலும் இளங்குற்றநடத்தைக்கு காரணமாக அமையலாம். கல்வி மீதான வெறுப்பு, கல்வி அடைவுகளைப் பெறத் தவறுதல், பாடசாலை மீதான வெறுப்பு முதலியன இடைவிலகலைத் தூண்டுகின்றன. அதேசமயம் பாடசாலைகளில் அதிகமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதும், பாரபட்சம் காட்டப்படுவதும் குற்ற நடத்தைக்கு காரணமாக உள்ளன.

## இயல்பூக்கங்களும் உந்தல்களும்

இயல்பூக்கங்களும் (Instincts) உடன்பிறந்த கணத்தாக்குகளும் (innate impulses) வன்போக்கினையும் குற்ற நடத்தைகளையும் விளக்கப் பயன்படுத்தப்படுகின்றன. Sigmund Freud அடக்கி ஒடுக்கப்பட்ட மனவெழுச்சிகள், குற்றநடத்தைக்கு இட்டுச்செல்லும் எனக் குறிப்பிடுகிறார். அதேசமயம் Konrad Lorenz என்பவர் சண்டையிடும் இயல்பூக்கத்தினால் குற்றநடத்தை விளைவதாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு இயல்பாகவே ஒருசிலருக்குள் காணப்படும் மோசமான இயல்பூக்கங்களும் உந்தல்களும் குற்றநடத்தையை தூண்டுகின்றன.



## இளங்குற்ற நடத்தையை குறைப்பதற்கான நுட்பங்கள்

1. மீள சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து முன்னெடுத்தல்.


2. கல்வி கற்பதற்கான அல்லது ஆர்வமான தொழில்வான்மையினை விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பளித்தல்.

3.பெற்றோருக்கான விழிப்புணர்வுத் திட்டங்கள்.

4. உளச்சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தல்.

5. சிறுவர்களிடத்தில் சுய ஒழுக்கப்பண்புகளை சிறுவர் உளவியல் எண்ணக்கருக்களுக்கு அமைய வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

6. சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சிறுவர்களை நடத்துவதற்கென விசேடமாகப் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை நியமித்தல்.



7. குற்றம் செய்யும் பிள்ளைகளின் குற்றம் செய்வதற்கான உண்மையான காரணத்தைக் கண்டறிந்து அதை தணிப்பதற்கான கொள்கை ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

8. நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தை நாடுதல்.

9. தொலைக்காட்சி மற்றும் ஏனைய ஊடகங்களில் வரும் குற்றநடத்தை தொடர்பான காட்சிகளைத் தடை செய்தல்.

இளங்குற்றநடத்தை பாரிய விளைவுகளை ஏற்படுத்துவதாகக் காணப்படுவதனால் இதனைக் கட்டாயம் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இளங்குற்றவாளிகளை சமூகத்திலிருந்த ஒதுக்காது அவர்களையும் மனிதர்களாக நோக்குதல் வேண்டும். எனவே சமூகத்தில் இளங்குற்ற நடத்தை யுடையவர்களை இனங்கண்டால் அவர்களை வழிப்படுத்த பெற்றோர், ஆசிரியர், சமூகவியலாளர், உளவியலாளர், சட்டத் துறையினர் போன்ற துறைசார் வல்லுனர்கள் முன்வரவேண்டும். இன்றைய இளங்குற்றவாளிகள் முறையாக சீர்திருத்தப்படாது புறக்கணிக்கப்பட்டால் எதிர்கால சமுதாயம் குற்றங்கள் நிறைந்த சமூகதாக மாறுவதை தடுக்க முடியாது போய்விடும் என்ற உண்மையை நாம் அனைவரும் புரிந்து செயற்பட வேண்டும்.

# இலங்கையின் சிறந்த 10 பாடசாலைகளில் தெரிவான மூன்று தமிழ் பாடசாலைகள்

வடக்கின் யாழ் மாவட்டத்தில் இருந்து வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இந்துக் கல்லூரி என்பனவும், வவுனியா மாவட்டத்தில் தேசிய பாடசாலையான வவுனியா தமிழ் மகாவித்தியாலயமும் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன.




இந்த தரம் உயர்வின் மூலம் பாடசாலையின் அதிபராக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு சமனான SLEAS Grade 1 உத்தியோகத்தர் காணப்படுவதோடு, பிரதி அதிபர்களாக இருவர் SLEAS Grade 3 உத்தியோகத்தர்களும் பணியாற்றுவர்







## உலகின் மிகப்பெரிய பாம்பு

உலகின் மிகப்பெரிய பாம்பு என்று நம்பப்படும் 26 அடி நீளமுள்ள பச்சை அனகோண்டா பாம்பு ஒன்றின் காணொளி ஒன்றை விஞ்ஞானியான ஃப்ரீக் வோங்க் என்வர் பதிவிட்டுள்ளார். அமேசான் மழைக்காடுகளில் இருந்து இந்த புதிய வகை பச்சை அனகோண்டாவை விஞ்ஞானிகள் குழு கண்டுபிடித்துள்ளது.






# பிடியெடுப்பின் போது மறைக்க முடியாத முகங்கள்

எஸ்.எஸ்.நுஜன்

உதாரணமாக, ஒரு பிடியெடுப்பை தவறவிடுவது மோசமானது எனினும், உலகக் கோப்பையில் நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர் முகமது சிராஜ், செய்தது போல் தொண்டையில் பிடிப்பது இன்னும் மோசமானது. இந்த இலகுவான பிடியெடுப்பை தவறவிட்ட பிறகு பந்துவீச்சாளரைச் சந்திக்க வேண்டிய பயத்தையும், பின்னர் உடைமாற்றும் அறையில் தன்னை நியாயப்படுத்தக் கூட வார்த்தை அவருக்கு இல்லை என்ற கவலையையும் அவரின் முகத்தில் மறைக்க முடியாது.

மறுபுறம், பிடியெடுத்தவர் தான் களத்தில் இல்லை என்பதை பொருட்படுத்தாது, அல்லது அது போட்டியின் முடிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்ற உணர்வில்லாமல் ஒரு பிடியெடுப்பை பிடித்ததில் மகிழ்ச்சி அடைந்து அதை கொண்டாடுதல் ஆகும்.





மேலும் பிடியெடுப்பின் மறுமுனையில் ஒரு முகமும் உள்ளது, இது ஒரு சிந்தனையற்ற அல்லது தேவையற்ற ஸ்லாக் மூலம் துடுப்பாட்ட வீரர் தன் இன்னிங்ஸ் இடையில் முடிவடைதை பார்ப்பது ஆகும். உ-ம் படத்தில் காட்டப்பட்டது போல் குயின்டன் டி காக், பந்து வீச்சாளர் மீதும், தன் மீதும் வெறுப்பு கொள்ளல்.

சில நேரங்களில் ஒரு பிடியெடுப்புத் தருணம் மனித உணர்ச்சிகளின் முழு வரம்பையும் கொண்டு வருகிறது. கீழே உள்ள ஒரு புகைப்படத்தில் மகிழ்ச்சி, பயம், எதிர்பார்ப்பு, கேளிக்கை - என அனைத்து உணர்வுகளும் உள்ளன.



பிடியெடுக்க முயற்சிக்கும் போது வீரர்களின் தலைகள் மோதிக்கொள்ளுதல். இதனால் பிடியெடுப்பு தவறவிடப்படும் தருணம்.



காகிசோ ரபாடாவை ஸ்டூவர்ட் பிராட் பிடியெடுத்ததைப் போல் செய்யும் பென் ஸ்டோக்ஸ். அதன் போது அவரின் முகம்.



மறுபுறம், கிறிஸ் வோக்ஸ், அவரது ஸ்டீவ் கேரல் தோற்றத்தைக் கொண்டிருப்பதால், அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு

வந்த பிறகு, டண்டர் மிஃப்லினில் அவருக்கு வேலை கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



ஒரு பிடியெடுப்பில் பெரும்பாலும் இரண்டில் ஒரு முடிவிற்கு வர வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆனால் யேவ ளுஉளைநச-டீசரவெ, பந்தை பிடியெடுக்காமல் விடுவதா அல்லது பற்களை இழப்பதா? என்ற துரதிர்ஷ்டவசமான நிலை.




டிராவிஸ் ஹெட் எப்பொழுதும் பிளான் பி வைத்திருப்பார். அவரால் கைகளால் பந்தை பிடிக்க முடியாவிட்டால், தனது வாயால் பிடித்தல். அதுவும் தனது கண்களை மூடிக்கொண்டு பிடியெடுத்தல்.



சிறந்த பிடியெடுப்பு-முகத்திற்கான விருது எப்போதாவது கிடைத்திருந்தால், ரோலோஃப் வான் டெர் மெர்வே நிச்சயம் அதனை வென்றிருப்பார்.

